**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**O.S. No. 132/2020**

**09.09.2024**

**P.W.1- சேனாதிபதி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் 2 ஏக்கர் 54 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்தில் எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த 85 சென்டையும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 85 சென்ட் போக மீத சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தானது க.ஒ.மாயாண்டித்தேவா் வாரிசுகள் என்ற அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் கொடிவழி ஜாபிதா பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் பாட்டனார் இளையபெருமாளுக்கு இந்த சொத்து பூர்வீக பாத்தியம் என்றால் தெரியாது. தாவா சொத்தின் அனுபவம் 2, 4 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆதியில் பட்டா, சிட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது அப்பா பெயரில் இருந்தது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா பெயருக்கு முன்னர் யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது அப்பாவின் பெயர் தனி பட்டாவாக இருந்தது. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் மொக்கமாயத்தேவா் பெயரிலும், 2,4 பிரதிவாதிகளின் பெயரிலும் கூட்டுபட்டாவாக இருந்தது என்றால் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அப்பா பெயரில் உள்ள வழக்கு சொத்து உள்ளடங்கிய 2 ஏக்கர் 54 சென்ட்டிற்கு வரி ரசீதுகள் இரண்டு முறை கட்டியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எனது அப்பா பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் 2012ம் ஆண்டிற்கு முன்பு

உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த லட்சுமணனின் சகோதரிதான் 2, 4 பிரதிவாதிகளிடம் தாவா சொத்தினை ஒத்தி வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்றால் அனுபவம் செய்யவில்லை. லட்சுமணன் சகோதரி பெயா் கருப்பாயி ஆகும். 2, 4 பிரதிவாதிகள் கருப்பாயிடமிருந்து சமீபத்தில் ஒத்தியை திருப்பிய விவரம் தெரியுமா என்றால் இல்லை. வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்பதற்கான எந்த ஆவணமும், முன்னா் அனுபவத்தில் இருந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது முன்னோர்களுக்கு தாவா சொத்து பாத்தியம் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.09.09 17:09:46 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.